**MOULAVI HMM YOOSUF**

**( MUSTHAFI)**

**ERAVUR**

**SRILANKA**

**Swjf786@gmail.com**


**WWW.JMHKALMUNAI.BLOGSPOT.COM**

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# புனித ஜமாஅத்தின் சிறப்புகள்



ஆக்கம் :

மௌலவி ஏ.முகம்மது அலீம் (மன்பயி)

வெளியீடு :

சுன்னத்துவல் ஜமாஅத் பேரவை

கல்முனை.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் அல் மதக் யாரஸூலல்லாஹ்

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹூ

அன்பார்ந்த உண்மையை அறிய வேண்டுமென்ற ஆர்வம் கொண்ட இஸ்லாமிய சகோதரர்களே?

உலகம் முழுவதுமுள்ள இஸ்லாமியர்களால் பேணப்பட்டுவரும் ஷஃபான் பிறை 15 (பறாஅத்) அன்று நோன்பு நோற்பதையும் அன்றிரவு மூன்று யாஸீன் ஓதுவதையும் பித்அத் என்றும் அதற்கு எவ்வித ஆதாரம் இல்லை என்றும் கூறி மக்கள் மத்தியில் பித்தலாட்டத்தை ஏற்படுத்தித் திரிகின்றனர் ஒருகூட்டம். எனினும் அதற்கு ஒரு சில ஆலிம்களும் தாளம் போடுவதை பார்க்கும் போது மிக மன வேதனையாக இருக்கின்றது. (இவர்கள் தெளிவைத் தேடுவதை விடுத்து ஏன் இப்படி செய்கிறார்கள் என்பதை எம்மையெல்லம் படைத்த ரப்புல் ஆலமீனுக்கே தெரியும். இருப்பினும் உண்மையைத் தேடி அலையும் எமது சமூகத்தினருக்காகவும் தெரிந்தும் தெரியாதது போல் அல்லது அறியாமல் இருக்கும் சங்கைமிக்க அறிஞர் குழாமினருக்கும் எமக்குத் தெரிந்த அளவு ஆக்கபூர்வமான தெளிவுகளை அல்லாஹ் ரசூலுடைய பொருத்தத்தை நாடி முன்வைக்கிறோம். அல்லாஹ் இதனை தூய்மையானதாக்கி ஏற்றுக் கொள்வானாக.

## பறாஅத்

ஷஃபான் மாதம் பிறை 15ஆம் தினத்து இரவையே நாம் பறாஅத்துடைய இரவு என்ற பெயரைச் சூட்டி அழைக்கிறோம். இத்தினமும் இதன் இரவும் எத்தனை அருள் நிறைந்தது என்பதை கூறிமுடிக்க முடியாது. இருப்பினும் அவற்றுள் சிலவற்றை மாத்திரம் இங்கு நாம் குறிப்பிடுகின்றோம்.

- இன்றைய தினத்தில்தான் அல்குர்ஆன் உம்முல் கிதாபியிலிருந்து முதலாம் வானத்திற்கு இறக்கிவைக்கப்பட்டது. முதலாம் வானத்திலிருந்து லைலத்துல் கத்ருடைய இரவில் பூமிக்கு இறக்கிவைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| ஆதாரம் : | துர்குல் மன்தூர் | பக்கம் : 402 | பாகம் : 07 |
| | தப்ஸீருஸ் ஸாபி | பக்கம் : 57 | பாகம் : 04 |
| | தப்ஸீர் ருகுல் பயான் | பக்கம் : 402 | பாகம் : 08 |
| | தப்ஸீர் ராஸீ | பக்கம் : 237 | பாகம் : 02 |
| | அபுஸ் ஸூஊத் | பக்கம் : 553 | பாகம் : 05 |

திஙகள் அன்று நோன்பு பிடியுங்கள் ஏனெனில் அதுதான் நான் பிறந்த தினமாகும் அதாவது நாயகம் (ஸல்) அவர்கள் எமக்கு கிடைத்தது மிகப்பெரிய நிஃமத்தாகும். உலகத்தில் அதைவிட ஒரு சந்தோஷமான விடயம் வேறொன்றுமில்லை. எனவே அன்றைய தினம் நோன்பு நோற்கும்படி நபி (ஸல்) அவர்கள் ஏவினார்கள்.

மேலும் புனித மிஃறாஜ் உடைய தினத்திலும் நோன்பு நோற்பது சுன்னதாக்கப்பட்டுள்ளது. காரணம் அன்றைய தினமே தொழுகை எமக்கு விதியாக்கப் பட்டது. இதுவும் ஒரு பெரும் மகிழ்ச்சி தரும் விடயமாகும். எனவே பறாஅத் உடைய இரவில்தான் குர்ஆன் முதல் வானத்திற்கு இறக்கிவைக்கப்பட்டது. என்ற அறிவிப்பின்படி அன்றைய தினம் நோன்பு வைப்பது நபி வழியாகும்.

அடுத்ததாக நோன்பு ஹறாமாக்கப்பட்ட நாட்களாகிய இரு பெருநாள் தினங்கள் "அய்யாமுத்தஷ்ரீக்" என அழைக்கப்படும் மூன்று நாட்கள் "யவ்முல் ஷக்கு" ஷஃபான் பிறை 30 எனப்படும் சந்தேகத்துக்குரிய நாள் ஆகிய இவை தவிர்ந்த ஏனைய நாட்களில் நோன்பு வைப்பதற்கு இஸ்லாத்தில் எவ்வித மறுப்பும் கிடையதாது. மட்டுமன்றி அவ்வாறு நோன்பு வைப்பது ஸுன்னத்தாகும் ஏனெனில் கண்மனி நாயகம் (ஸல்) கூறினார்கள் "யார் அல்லாஹ்வுடைய பாதையில் ஒரு நாள் நோன்பு நோற்கிறாரோ அவனை அல்லாஹ் நரகிலிருந்து 70 ஆண்டு நடை தூரத்திலிருந்து தூரமாக்கிவிடுகின்றான்" (புஹாரி, முஸ்லிம்) இந்த ஹதீஸில் நாள் கூறப்படாத படியால் நோன்பு நோற்றாலும் அது இந்த ஹதீஸில் கூறப்பட்ட நற்கூலியை எமக்கு பெற்றுத்தரும் என்பதில் ஐயமில்லை. எனவே பறாஅத் உடைய இரவில் நோன்பு நோற்றாலும் இந்த நற்கூலி எமக்கு கிடைக்கும். அது ஸுன்னத் என்பது வெள்ளிடைமலை போன்ற உண்மையாகும்.

## யாஸீன் ஓதுதல்

அடுத்து இந்த பித்தலாட்டக்கும்பல் புதிதாக கண்டுபிடித்திருக்கும் புதிய கண்டுபிடிப்பு இத்தினத்தில் மூன்று யாஸீன் ஓதுகின்றார்களே! இது தேவையில்லை. இது பித்அத்து என்பதாகும். இவர்கள் தோற்றத்தில் பெரியவர்களாக இருப்பினும் அறிவில் மூன்று யாஸீன் ஓதுவதற்கான காரணம் யாதெனில் இன்றைய இரவில் இறைவன் முதலாம் வானத்திற்கு இறங்கி வந்து "என்னிடம் பிழைபொறுக்கத் தேடுபவர்கள் எவரும் இல்லையா? நான் அவர்களுக்கு பிழைகளைப் பொறுத்து விடுகின்றேன்" மேலும் நான் அவர்களுக்கு ரிஸ்க்களிக்கின்றேன், மேலும் துன்பங்களை கொண்டு சோதிக்கப்படுபவர்கள் இல்லையா? நான் அவற்றை நீக்கி விடுகின்றேன்." என இம் மூன்று விடயங்களையும் தன்னிடம் கேட்கும்படி இறைவன் கூறுகின்றான்.

எனவேதான் இந்த மூன்று விடயங்களையும் நாம் இறைவனிடம் கேட்பதாக மூன்று தடவைகள் யாஸீன் ஓதி இறைவனிடம் கேட்கிறோம் இச்செயல் அன்று தொட்டு இன்றுவரை முஸ்லிம்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

ஆதாரம் : நிஹாயதுல் அமல் பக்கம் : 280
இத்ஹாப் பக்கம் : 427 பாகம் : 03

இவ்வாறு யாஸீன் ஓதி இறைவனிடம் பிரார்த்திப்பதற்கு அடிப்படை யாதெனில் கண்மனி நாயகம் (ஸல்) கூறினார்கள். "யாஸீன் எதற்காக ஓதப்பட்டதோ" அது நிறைவேறும்.

ஆதாரம் : றூஹுல் பயான் பக்கம் : 443 பாகம் : 07

எனவே நாம் மூன்று யாஸீன்களை ஓதி இறைவனிடம் இந்த விடயங்களைக் கேட்பதில் எந்தவிதமான தவறும் இல்லை. மாறாக இதை ஸுன்னத் எனறே குறிப்பிட வேண்டும்.

## உரொட்டி சுட்டுக் கொடுத்தல் (தர்மம் செய்தல்)

அடுத்ததாக உள்ள விடயம் இந்த பறாஅத்துடைய இரவில் உரொட்டிகள் சுட்டு அதனை ஏனையவர்களுக்கு தர்மம் செய்வதாகும். இது கூட மார்க்கத்தி ற்கு முரணான ஒரு காரியம் அல்ல மாறாக இதுவும் சுன்னத்தான காரியம் என்றே கூறவேண்டும். ஏனெனில் கண்மனி நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதன் வந்து இஸ்லாத்தில் சிறந்தது எது நாயகமே என்று வினவியதற்கு "உணவளிப்பதும், நீர் அறிந்தவர்களுக்கும் அறியாதவர்களுக்கும் ஸலாம் கூறுவதும்" என்று கூறினார்கள்.

ஆதாரம் : அல் ஜாமிஉஸ் ஸஹீர்

எனவே எங்கள் நலவு கெடுதிகள் நிர்ணயிக்கப்படுவதால் இன்றைய தினம் அதிகம் ஸதகா செய்வதன் மூலம் அதை இறைவன் மாற்றி அமைத்து விடுவான் என்ற நம் நோக்கமே இதனை குறிப்பாக இன்றைய இரவில் செய்வதற்கான காரணமாகும். மேலும் ஸதகாவில் சிறந்தது உணவளிப்பது என்ற நபி மொழிக்கேற்பவே எமது முன்னோர்கள் ரொட்டி சுட்டுக் கொடுப்பதை அமுல் படுத்தியுள்ளனர். எனவே இப்படிப்பட்ட நல்ல கருமங்களை எல்லாம் உருவாக்கிய எமது முன்னோர்களை தூற்றுவதா? அல்லது எம்மை மனிதர்களாக்கிய அவர்களைப் போற்றுவதா?

அன்பார்ந்தவர்களே! எமது முன்னோர்களான இமாம்கள் நல்லோர்கள் ஸாலிஹீன்கள் உருவாக்கிய நல்லதொரு சுன்னத்தை, நேற்றைய மழைக்கு இன்று முளைத்த காளான்களாகிய இவர்கள் மறுக்கின்றார்கள் என்றால் இது இறுதி நாளின் அடையாளந்தான் என்று உறுதியாக விளக்குகின்றது



- இன்றைய தினத்தில் நாம் புரிந்த அமல்கள் எல்லாம் அல்லாஹ் அளவில் மலக்குமார்கள் மூலம் உயர்த்தப்படுகிறது.
  ஆதாரம் : மிஸ்ஹாதுன் மஸாபிக் பக்கம் : 115
  இஆநதுத் தாலிபின் பக்கம் : 370 பாகம் : 03

- இன்றைய இரவில் அல்லாஹ் ஏராளமான நரகவாதிகளை விடுதலை செய்கிறான்.

  ஆதாரம் : நபி (ஸல்) சொன்னார்கள் "நிச்சயமாக அல்லாஹுத்தஆலா ஷ.்பான் மாதம் பிறை 15 பறாஅத் அன்றைய இரவில் இணைவைப்பவனையும் பாவத்தில் மூழ்கியிருப்பவனையும் தவிர ஏனைய தனது சகல படைப்பினங்களுடைய பாவங்களையும் மன்னிக்கிறான்" (இப்னு மாஜாஹ் பக்கம் : 99)

- இன்றைய தினத்தில்தான் எமது இன்றைய ஷ.்பான் பிறை 15இல் இருந்து அடுத்த வருட ஷ.்பான் பிறை 15 வரையுமுண்டான நம் மரணதினம் உட்பட சகல எமது நடவடிக்கைகளும் நிர்ணயிக்கப் படுகின்றன.
  ஆதாரம் : அல்குர்ஆன் சூரா அத்துக்கான்
  றூகுல் பையான பக்கம் : 414 பாகம் : 08

- இன்றைய இரவில்தான் இறைவன் ஆதம் (அலை) அவர்களின் பிச்சளங்களின் பிறப்பு இறப்பு என்பவற்றை நிர்ணயிக்கின்றான். இன்னும் அவர்களின் ரிஸ்க் நிர்ணயிக்கப்படுகின்றது.
  ஆதாரம் : மிஸ்காத்துன் மஸாபீஹ் பக்கம் : 115

- இன்றைய இரவில் மக்களுக்கு விஷேடமான பாவ மன்னிப்பு வழங்கப்படுகிறது. என்று இப்னு ஹஜர் (ரஹ்) அவர்களும் கூறியுள்ளார்கள்.
  ஆதாரம் : பதாவா அல்குப்ரா பக்கம் : 80 பாகம் : 02

- இன்றைய தினத்தில்தான் பைத்துல் முகத்தஸை முன்னோக்கி தொழுதுவந்த நபி (ஸல்) அவர்கள் இறைவனின் கட்டளைப்படி க.்பாவை முன்னோக்கி தொழுத தினமாகும்.
  (கிப்லா மாற்றப்பட்ட தினம்)
  ஆதாரம் : ஸீரத்துல் ஹல்பிய்யா பக்கம் : 352 பாகம் : 02

இவ்வாறான ஏராளமான எண்ணிலடங்காத சிறப்புக்களும் சங்கைகளும் இந்த இரவுக்கு இருக்கின்றது என்பதை யாராலும் மறுக்க முடியாது என்பதை நீங்கள் விளங்கியிருப்பீர்கள்.

தற்போது கிளம்புள்ள "பறாஅத்" என்ற பெயரை ஏற்றுக்ககொள்ள மறுப்பவர்கள். ஷ.்பான் பறை 15 என்று கூறலாம் ஆனால் "பறாஅத்" உடைய இரவு என்று சொல்வதற்கு எந்தவித ஆதாரமும் கிடையாது என்று மறுத்து விடுகின்றனர்.

ஆனால் இன்றைய தினத்திற்கு "பறாஅத்" என்ற பெயரை நாம் கூட்டவில்லை குர்ஆனுடைய விரிவுயாளர்களே இந்தப் பெயரைச் சூட்டியுள்ளனர். இந்த இரவிற்கு நான்கு பெயர்கள் உண்டு அதில் ஒன்று (பறாஅத்) ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| ஆதாரம் : | தப்ஸீர் றூஹுல் பயான் | பக்கம் : 402 | பாகம் : 08 |
| : | தப்ஸீர் ஸாவீ | பக்கம் : 57 | பாகம் : 04 |
| | துர்ருல் மன்தூர் | பக்கம் : 402 | பாகம் : 07 |
| | தப்ஸீர் ராஸீ | பக்கம் : 237 | பாகம் : 27 |

எனவே இவ்விரவிற்கு பறாஅத் என்ற பெயரைச் சூட்டி அழைப்பதற்கு எந்த விதமான மறுப்புக்களுக்கும் இடமில்லை.

## நோன்பு நோற்றல்.

அடுத்ததாக உள்ள பிரச்சினை இந்த தினத்தில் நோன்பு நோற்கத் தேவையில்லை. இதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்பதாகும். நோன்பு நோற்க வேண்டும் என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| ஆதாரம் : | அத்தரஹீபு வத்தர்ஹீப் | பக்கம் : 119 | பாகம் : 02 |
| | மிஷ்ஹாதுல் மஸாபீஹ் | பக்கம் : 115 | |
| | இப்னு மாஜா | பக்கம் : 99 | |
| | பதாவா அல்ரமலீ அலா | | |
| | ஹாமிஷ் பதாவா அல் குப்ரா | பக்கம் : 79 | பாகம் : 02 |

அதுமட்டுமல்ல மேலும் கண்மனி நாயகம் (ஸல்) அவர்கள் திங்கள், வியாழக்கிழமைகளில் எனது அமல்கள் இறைவனுக்கு எடுத்துக காண்பிக்கப்படுகின்றன. எனவே அத்தினத்தில் நான் நோன்பாளியாக இருப்பதை விரும்புகின்றேன் என்று கூறினார்கள். வாரத்திலே இரு நாட்கள் எப்படி அமல்கள் இறைவனுக்கு எடுத்துக் காண்பிக்கப் படுகின்றனவோ அதே போன்றே வருடத்தில் இரண்டு தடவைகள் எமது அமல்கள் இறைவனுக்கு எடுத்துக்காண்பிக்கப்படுகின்றன. ஒன்று லைலதுல் கத்ர் உடைய இரவு மற்றொன்று ஷ.்பானுடைய இரவாகிய பறாஅத் உடைய இரவு (ஷ.்பானுடைய பிறை 15ம் இரவு) எனவே அமல்கள் இறைவனுக்கு எடுத்துக்காண்பிக்கப்படும் நாளையில் நோன்பு நோற்கும்படி ஏவப்பட்டிருந்தால் இந்த பறாஅத்துடைய தினமும் எமது அமல்கள் இறைவனிடம் எடுத்துக்காண்பிக்கப்படுகின்றது. எனவே அன்றைய தினத்திலும் நோன்பு நோற்பது நபி வழியே என்பது நிரூபணமாகிறது. மேலும் இஸ்லாம் எமக்கு ஏவியிருக்கும் ஒரு பொதுவான விடயம் ஒரு சந்தோசத்தை கொண்டாடும் முகமாக நோன்பு நோற்றல். உதாரணமாக அருமை நாயகம் (ஸல்) அவர்கள் எமக்கு கிடைத்தமை., நாயகம் (ஸல்) அவர்கள் எமக்கு கூறினார்கள்.



ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் "முந்திய சமுதாயத்தைப் பிந்திய சமுதாயம் சபிக்கும் என்று கண்டால் அது மறுமை நாளின் அடையாளங்களில் உள்ளது எனவே மறுமை நாளை எதிர்பாருங்கள்" என்று கூறினார்கள்.

**அன்பார்ந்த இஸ்லாமிய சகோதரர்களே!**

நோன்பு நோற்பது யாஸீன் ஓதுவது உணவளிப்பது இவைகள் ஒரு கெட்ட காரியமோ அல்லது ஒரு வெறுக்கத்தக்க செயலோ அல்ல. அது மட்டுமன்றி நபி (ஸல்) அவர்கள் ஷ.்பான் மாதம் பிறை 15 வரை நோன்பு நோற்று இருக்கின்றார்கள். அது மட்டுமன்றி அம்மாதம் எனது மாதம் எனவே அம்மாதத்தில் நீங்கள் நோன்பு நோற்றுக்கொள்ளுங்கள் 'என்று கூறியிருக்கின்றார்கள். ஆனால் எமது சமுதாயத்தில் அது நடைமுறையில் இல்லை இருந்தாலும் குறைந்தபட்சம் ஷ.்பான் மாதம் பிறை 15 பறாஅத் இரவு அன்று மட்டுமாவது நோன்பு பிடிக்கிறார்கள் என்றால் அதை நாம் தடுத்து நிறுத்துவதா? அல்லது இன்னும் வலுவூட்டி அதை வளர்த்துவிடுவதா? சிந்தனை செய்துபாருங்கள். இன்று சில விசம சக்திகள் இதனை தடுத்துநிறுத்த முயற்சி செய்கின்றனர். அதாவது இன்று மட்டும் நோன்பு வைப்பது சுன்னத்தல்ல. ஷ.்பான் பிறை 01 தொடக்கம் 15 வரை நோன்பு வைப்பதுதான் சுன்னத் மேலும் ஒவ்வொரு மாதமும் பிறை 13, 14, 15 தினங்களிலும் தான் நோன்பு வைப்பது சுன்னத்தாகும். எனவே இந்த தினத்தை மாத்திரம் விஷேடமாக நோன்பு பிடிக்கத் தேவையில்லை என்று கூறுகிறார்கள்.

அவர்கள் கூறும் விடயமெல்லாம் சரியென்று ஏற்றுக்கொண்டாலும் கூட பிறை 15 ஆகிய பறாஅத்துடைய இரவை மாத்திரம் முக்கியத்துவப் படுத்த வேண்டாம் என்ற வாதத்தையும் அன்றைய தினம் நோன்பு நோற்பது சுன்னத் என்ற அவர்களுடைய முட்டாள்தனமான வாதத்தையும் எம்மால் ஏற்க முடியாது. ஏனெனில் அது சம்பந்தமான விடயங்களை நாம் முன்பு தெளிவாக கூறியுள்ளோம். அவ்வாறே நாம் மூன்று யாஸீன் ஓதுகின்றோம் இவையெல்லாம் ஒரு கெட்ட காரியமோ அல்லது தடுக்கப்பட வேண்டிய விடயமோ அல்ல. இஸ்லாத்தில் தடுக்கப்பட வேண்டிய எத்தனையோ காரியங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் வெளியில் சொன்னால் குடியிருக்க இடம் கிடைக்காது அல்லது நாலு பணக்காரன் மதிக்கமாட்டான் என்று எண்ணி அவற்றையெல்லாம் தடுக்காமல் இஸ்லாத்தில் இருக்கும் சுன்னாக்களை. பிரச்சினைகளாக ஆக்கி பெரிதுபடுத்தி அவற்றை இல்லாதொழிக்க கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் யஹூதிகளின் பணத்திற்கு வாலாட்டும் உலமா வேடம் பூண்ட சிலர் புனிதமான மார்க்கத்தை கொச்சைப்படுத்த நினைக்கிறார்கள். அதிகம் தேவையில்லை எமது முன்னோர்கள் மூதாதையர்களை சற்று சிந்துத்துப் பாருங்கள். அவர்களுடைய காலத்தில் இவைகள் நடைமுறையில் இருந்ததா? இல்லையா? சந்தேகம் என்றால் உங்கள் பாட்டன் பூட்டனைக் கேட்டுப்பாருங்கள் தெரிந்து கொள்ளுவீர்கள்.

எனவே அன்பார்ந்த அல்லாஹ்வின் நல்லாடியார்களே! நேற்றைய மழைக்கு இன்று முளைத்த காளான்கள் இவர்கள் அல்குர்ஆன், அல்-ஹதீஸ், அல்-இஜ்மாஉல் கியாஸ் என்பது பற்றி தெளிவான அறிவில்லாதவர்கள் மட்டுமன்றி, பித்னாக்களை விளைவித்துக் கொண்டும் இருக்கின்றார்கள். எனவே இப்படிப்பட்ட பித்தலாட்டக்க காரர்களுடைய முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களைக் கேட்டு நாம் வழிகெட்டுவிடமால் இருக்க எல்லாம் வல்ல இறைவன் எம் அனைவருக்கும் நல்லருள் புரிவானாக.

**அமீன்.**

**குறிப்பு** : மேல் எடுத்துக் கூறியுள்ள ஹதீஸ்களை ஒரு சில வேளை அது பலவீனமாது என்று இந்தக் கும்பல்கள் தட்டிக்கழிக்க எத்தனிக்கலாம். ஏனெனில் சஹீஹான ஹதீஸ்களைக்கூட அவர்களின் கருத்திற்கு முரண்படும் பட்சத்தில் அதை சுரண்டிப்பார்ப்பது அவர்களின் இயல்பான குணமாகும். என்றாலும் பலவீனமான ஹதீஸாக இருந்தாலும் அவற்றைக் கொண்டு அமல் செய்ய முடியும் என்பது முஹத்திஸீன்களின் ஹதீஸ் கலை விற்பன்னர் களுடைய ஏகோபித்த முடிவு என்பது அவர்களுக்கும் தெரியும்.

ஆதாரம் : முகத்திமதுல் மிஷ்காத் பக்கம் : 07
தைஸீருமுஸ்தலஹில் ஹதீஸ் பக்கம் : 67

மேலும் இது சம்பந்தமான ஏராளமான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. இப்பிரசுரம் நீண்டுவிடும் என்பதால் சுருக்கிக் கொண்டோம். தேவை ஏற்படின் இன்ஷா அல்லாஹ் வெளியிடுவோம். அல்லாஹ் நாம் அறிந்தவற்றைக் கொண்டு முடியுமான அளவு அமல் செய்ய அருள் புரிவதோடு வழிகேட்டிலிருந்து எம்மைப் பாதுகாப்பானாக.

**ஆமீன்.**

## இவ்வருட பராஅத் இரவு

**ஹிஜ்ரி 1429 ஷஃபான் பிறை 15 ஆகும்.**
**(2008.08.17ந் திகதி ஞாயிறு பி.ப. திங்கள் இரவு)**